**In the Court of the Judicial Magistrate No.II, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC 455/2022** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : | நாகராஜன் | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | முருகன் | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

(A2,A11 present and others absent petition filed and allowed )

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 17.11.2025

---

**முதல் விசாரணை**

நான் 27.06.2022ம் தேதி மேற்படி வழக்கின் Crl.M.P. No. 853/2022ல் ம.சா.ஆ. 4 ஆக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவத்தை நான் பார்க்கவில்லை.

**புகார்தாரர் தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டுபுகார்தாரர் தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை**

கடந்த 22.09.2019ம் தேதி மதியம் 2.00 மணியளவில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் எனது நண்பர் புகார்தாரர் இராமகிருஷ்ணன் சிகிச்சை எடுத்துக்கொண்டு இருந்ததை நான் பார்க்க சென்றேன் என்றால் சரியல்ல. அப்போது புகார்தாரரை எதிரிகள் செல்வம், திருப்பதி ஆகியோர் அடிக்க வேண்டும் என்று பேசிகொண்டிருந்ததை நான் நேரடியாக பார்த்தேன் என்றால் சரியல்ல. நான்புகார்தாரரை மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்து வீட்டிற்கு அழைத்து சென்றேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகள் புகார்தாரரை கொலை மிரட்டல்விடுத்ததை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி crl.M.P. 853/2022 ல் இந்த வழக்கில் முதற்கட்ட விசாரணையில் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாகவும் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது சம்பவத்தை பார்க்கவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துவிட்டு தற்போது அதை மறுத்து சாட்சியம் அளித்ததால் என்மீது பொய் சாட்சியம் அளித்ததாக நடவடிக்கை எடுக்க உகந்தது என்றால்

சரியல்ல. எதிரிகள் மிரட்டியதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.